www.padippakam.com



# யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்ட சாபுமல் குமரய

21

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

ஜெயவீரன் ஆட்சிக் காலத்தில் விஜயநகரத்தில் அரசாண்ட முகதலாம் விருப்பாஷணனின் பிரதிநிதியாக மதுரையிலிருந்து அரசாண்ட கம்பண்ண நாயக்கனது படைகள் இலங்கை வந்து ஜெயவீரனின் துணையோடு கோட்டை அரசன் குமார அளகக்கோனைப் பிடித்து அவன் தம்பிமார் நால்வரையும் கொலை செய்து அவனிடம்திறைபெற்று மீண்டதாக விருப்பாட்ஷணனுடைய தமிழ்நாடு ஆரியூர் செப்பேட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையில் இது ஜெயவீர சிங்கையாரியன் கோட்டை அரசன் அளகக்கோன் மீது படையெடுத்தபோது அவனுக்குத் துணையாக வந்த மதுரைப் படைகள் அடைந்த வெற்றியைக் குறிக்கும் என்று கருதப்படுகிறது.

கி.பி. 1410-ல் ஜெயவீரன் இறந்ததும் அவனது சகோதரனான குணவீரசிங்கையாரியன் பரராஜசேகரன் என்ற பட்டத்துடன் சிங்கைநகர் அரசனானான். இவனை ஜெயவீரனின் மகன் என்று சொல்வோரும் உண்டு. கி.பி. 1414-ல் இவன் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில் கர்ப்பக்கிரகத்தை கட்டுவித்துள்ளான். இதற்கு வேண்டிய கற்களை திருகோணமலையிலிருந்து வெட்டி எடுத்து அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது. இது தொடர்பான சாசனங்களும் கல்வெட்டுக்களும் இராமேஸ்வரம் கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்ததாகவும், 18-ம் நூற்றாண்டின் இறுதியில் இராமநாதபுரம் சேதுபதிக்கும் இராமேஸ்வரம் கோயில் பிராமணர்களுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாக இரு பகுதியாரும் தத்தமக்குச் சார்பாக சாசனங்களையும் கல்வெட்டுக்களையும் திருத்தியும் அழித்தும் வந்தபோது, குணவீரசிங்கையாரியனின் சாசனமும் கல்வெட்டுக்களும் கூட சிதைந்து அழிந்துவிட்டதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகின்றார்.

தனது சகோதரனைப் போலவே குணவீரசிங்கையாரியனும் தமிழை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வந்தான். இவனது காலத்திலேதான் பரராஜசேகரம் என்ற சிறந்த வைத்திய நூல் எழுதப்பட்டது. கி.பி. 1440-ல் இவன் இறந்ததும் இவனது மகன் கனகசூரியசிங்கையாரியன் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் ஆட்சிக்கு வந்தான்.

இவனது ஆட்சிக்காலத்தில் கோட்டையிலிருந்து அரசாண்ட 6-ம் பராக்கிரமபாகுவின் அரசசபைக்கு கேரளத்திலிருந்து போர்வீரன் ஒருவன் வந்தான். அவனது போர்த்திறமைகளைக் கண்டு மெச்சிய பராக்கிரமபாகு அவனைத் தனது உறவுமுறைப் பெண்ணொருத்திக்கு மணம் முடித்துவைத்து அவர்களுக்குப் பிறந்த பெருமாள் சாபுமல் குமாரய என்கிற செண்பகப் பெருமாளையும், அம்புலகல குமாரய என்கிற ஜெயவீரனையும் தனக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால் சுவீகாரப் புத்திரர்களாக எடுத்துக்கொண்டான். போர் வீரனான இவர்களின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த தமிழன் என்றே வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

பராக்கிரமபாகுவின் சுவீகார புத்திரர்களான செண்பகப் பெருமாளும் ஜெயவீரனும் வளர்ந்து பராயமடைந்தபோது பராக்கிரமபாகுவின் மகளான உலகுடையதேவிக்கு ஒரு மகன் பிறந்தான். தன்னுடைய மகனுக்கே கோட்டை இராச்சிய அரசுரிமை கிடைக்கவேண்டுமென உலகுடையதேவி தந்தையிடம் வேண்டினாள். மகளின் வேண்டுகோளைத் தட்டமுடியாத பராக்கிரமபாகு செண்பகப்பெருமாளும் ஜெயவீரனும் அதற்கு அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று எண்ணினான். எனவே அவர்களை கோட்டை இராச்சியத்திலிருந்து அப்புறப்படுத்த அவன் விரும்பினான்.

அதன் முதல்கட்டமாக "நமது கோட்டை இராச்சியம் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு அடிமைப்பட்டுப்போய்க் கிடக்கிறது. நீங்கள் எமது இராச்சியத்தை விடுவிக்க வேண்டும். அதற்கு முதலில் யாழ்ப்பாண அரசனிற்கு துணைநிற்கும் வன்னிச் சிற்றரசர்களை அடக்க வேண்டும் என்று செண்பகப் பெருமாளுக்கும் அவன் தம்பி ஜெயவீரனுக்கும் கட்டளையிட்டான்.

தங்களது வளர்ப்புத் தந்தையின் உள்நோக்கத்தை அறியாத அவர்கள் இருவரும் வன்னியர்கள் மீது படையெடுத்துச் சென்று அவர்களை அடக்கி வெற்றிகொண்டு திறைபெற்று வந்தார்கள். இது பராக்கிரமபாகுவிற்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தாலும் தன்னுடைய நோக்கம் நிறைவேறவில்லை என்று எண்ணி, இதுபோதாது யாழ்ப்பாண அரசனையும் வென்று அவனை எமக்கு அடிமையாக்கி திறைபெற்று வரவேண்டும் என்று சொன்னான். வலிமை மிக்க யாழ்ப்பாண அரசன் கனகசூரியசிங்கையாரியனுடன் மோதப்போகும் அவர்கள் திரும்பிவரப் போவதில்லை என்று அவன் நினைத்திருந்தான்.

ஆனால், கோட்டையிலிருந்து பெரும் படையுடன் புறப்பட்டு தனக்குச் சார்பாக தன் பக்கம் நின்ற வன்னியர்கள் சிலரையும் துணைக்கழைத்துக் கொண்டு பூநகரி வழியாக சிங்கைநகருக்குச் சென்ற செண்பகப்பெருமாள் அங்கிருந்த கனகசூரியசிங்கையாரியரின் பெரும்படையுடன் மோதினான்.



நல்லூர் கந்தசுவாமி கோயில்

இருதரப்பாருக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதலின் பின் கனகசூரியனின் படைகள் தோல்வியடைய சிங்கைநகர் கோட்டை இராச்சியத்திடம் வீழ்ச்சிகண்டது. கனகசூரியசிங்கையாரியன் தன் குடும்பத்துடன் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் சென்று திருக்கோவலூரில் தலைமறைவாக வாழ்ந்தான்.

கி.பி.1450-ல் நடைபெற்ற இந்தப் படையெடுப்பில் சிங்கநகரைக் கைப்பற்றிய செண்பகப் பெருமாள் அங்கிருந்த மாடமாளிகைகளை இடித்துத் தரை மட்டமாக்கியதோடு, தோல்வியடைந்த கனகசூரியனது படைவீரர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆயிரக்கணக்கில் வெட்டிக்கொன்றும் அவர்களது வீடுகளைத் தீக்கிரையாக்கியும் வஞ்சம் தீர்த்துக்கொண்டு கனகசூரியனது ஆட்சியில் அதிகாரிகளாக இருந்தவர்களை சிறைப்படுத்திக்கொண்டும் கோட்டைக்குத் திரும்பினான். அவனடைந்த பெருவெற்றியைக் கண்டு மனம்மகிழ்ந்த பராக்கிரமபாகு ஆரியவேட்டையாடும் பெருமாள் என அவனைப் புகழ்ந்து "நீ வெற்றிகொண்ட யாப்பா பட்டுண உனக்கே உரித்தாகட்டும்" என்று கூறி அவனை யாழ்ப்பாணத்திலிருந்து அரசாளும்படி அனுப்பிவைத்தான்.

தனது பரிவாரங்களுடன் குடாநாட்டுக்குத் திரும்பிய செண்பகப் பெருமாள் தன்னால் அழிக்கப்பட்ட குடாநாட்டின் தலைநகரான சிங்கைநகரை மீண்டும் தலைநகராக்க விரும்பாமல் கைவிட்டுவிட்டு நல்லூரை இராஜதானி ஆக்கிக் கொண்டான். கடற்கரையோரமாக இருந்த சிங்கைநகரில் தனது இராஜதானியை வைத்துக்கொண்டால் தமிழகத்துக்கு தப்பிச்சென்ற கனகசூரியன் படைதிரட்டிக் கொண்டு வந்து தன்னை தாக்கக்கூடும் என்று அஞ்சியதே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. எனவே கடல் மார்க்கத்தை விட்டு தள்ளியிருந்த நல்லூரை அவன் தலைநகராக்கியது மட்டுமல்லாமல் தான் சைவசமயத்தவன் என்று காட்டுவதற்காக, அங்கிருந்த பிராமணர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி தமிழ் மக்களின் இஷ்ட தெய்வமான முருகனுக்கு ஆலயம் ஒன்றையும் அங்கே கட்டுவித்தான்.

நல்லூரிலே அமைந்திருக்கும் கந்தசுவாமி கோயில் இந்த செண்பகப்பெருமாளால் கட்டப்பட்டதல்ல. அந்தக் கோயில் கட்டியத்தில் கூறப்படும் சிறீ சங்கபோதி செண்பகப்பெருமாள் என்ற பெயர் இவனுடையதல்ல, அந்தச் செண்பகப்பெருமாள் பாண்டிய மன்னனின் மந்திரிகளில் ஒருவர், அவர் இவருக்கு முன்பிருந்தவர், அவரே இந்தக் கோயிலைக் கட்டியவர் என்று யாழ்ப்பாண வைபவ மாலையில் மயில்வாகனப் புலவர் சொன்னதை அடிப்படையாக வைத்து வாதிடுவோர் பலர் உண்டு. ஆனாலும் யாழ்ப்பாண வரலாற்றை வெறும் அனுமானங்கள் ஊகங்கள் கர்ணபரம்புரைக் கதைகள் என்ற அடிப்படைகளுக்கு அப்பால் விஞ்ஞானபூர்வமான வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வுசெய்த முதலியார் இராஜநாயகம் போன்றவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவன் சிறீசங்கபோதி புவனேகபாகு என்று பின்னாளில் அழைக்கப்பட்ட இந்தச் செண்பகப் பெருமாள் தான் என்று நிறுவியிருக்கின்றார்கள்.

செண்பகப் பெருமாளின் யாழ்ப்பாண வெற்றி சிங்களப் பகுதிகளில் அவனை ஒரு காவிய நாயகனாக்கியது. நீண்டகாலமாகவே யாழ்ப்பாண அரசிற்கு சிங்கள அரசர்கள் திறை செலுத்தி வந்த நிலையை மாற்றி யாழ்ப்பாண அரசை சிங்கள அரசான கோட்டை அரசின் ஒரு அங்கமாக அவன் மாற்றியதால் சிங்களப் புலவர்கள் அவனை தங்களது கவிதாநாயகனாக ஆக்கிக்கொண்டார்கள். தங்காலைக்கு அண்மையிலுள்ள முல்கிரிய என்னும் இடத்தில் அமைந்திருந்த விகாரையைச் சேர்ந்த சிங்களப் புலவர் ஒருவர் செண்பகப்பெருமாளின் யாழ்ப்பாண வெற்றியை அடிப்படையாக வைத்து அவனைக் காவியநாயகனாக்கி 'கோகில . சந்தோசய' (குயில் விடு தூது) என்னும் பிரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் பிராமணர் ஒருவரும் செண்பகப் பெருமாள் சைவசமயத்திற்கு தொண்டாற்றுவதாகப் புகழ்ந்து அவனுக்கு விருந்தளித்ததாகவும் அதற்கு மெச்சிய அவன் அவருக்கு விருதும் பாராட்டுப் பத்திரமும் வழங்கியதாகவும் ஐதீகக் கதையொன்று உண்டு.

**- நக்கீரன்**

படிப்பகம்